# II. பொருளாதார நிதிப்போக்குகள்—1972

## (அ) தேசிய உற்பத்தியும் செலவும்

### 1. முன்னுரை

***மொத்தத் தேசிய உற்பத்தி***

இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றம் 1959இன் நிலையான விலைகளினூலான மொத்தத் தேசிய உற்பத்தியால் அளவிடப்பட்டபோது 1972 இல், 2.5 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. ஒப்புநோக்குகையில் 1971இல் இவ்வதிகரிப்பு 0.9 சதவீதமாயிருந்தது.

1972ஆம் ஆண்டின் நடுப்பகுதிக் குடித்தொகை, 1971ஆம் ஆண்டின் 2.0 சதவீதங்கொண்ட அதிகரிப்போடு ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலையான விலைகளின்படியான தனியாளுக்கான நியதியில், மொத்தத் தேசிய உற்பத்தி 1971ஆம் ஆண்டின் 1.1 சதவீதங்கொண்ட வீழ்ச்சிக்கெதிராக 0.4 சதவீதத்தால் அதிகரித்தது.

நிலையான விலைகளில் (1959) கைத்தொழிலின்படியான தேசிய உற்பத்தி பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

மொத்தத் தேசிய உற்பத்தி உண்மை நியதிகளின்படி, 1971ஆம் ஆண்டைவிட ரூ. 2,440 இலட்ச அதிகரிப்பைக் காட்டுகிறது. உள்நாட்டுப் பாவனைப் பொருட்களின் வெளியீட்டு அதிகரிப்பின் விளைவாக மொத்தத் தேசிய உண்மை உற்பத்திக்கு வேளாண்மைத்துறை வழங்கிய பங்கு உயர்ந்ததொன்ருக இருந்தது. உண்மையில் தேயிலை, றப்பர், நெல் ஆகியனவற்றின் வெளியீடு சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. ஆயினும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படும் ஏனைய பொருட்களின் அதிகரிப்பினுல் உற்பத்தியில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சி மேலதிகமாக ஈடுசெய்யப்பட்டது.

மொத்தத் தேசிய உண்மை உற்பத்திக்கு இரண்டாவது பெரும்பகுதி அரசாங்க நிருவாகத்துறையிலும் பணிகள் துறையிலுமிருந்து வழங்கப்பட்டது. அதேவேளை களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து, செய்தித்தொடர்புத் துறைகளும் வெளியீட்டதிகரிப்பில் சம அளவு பங்கினை வகித்தன.

வெளிநாட்டுப் பணவீக்கப்போக்குகளினுலும் நாணய மீள இணைப்பினுலும் ஏற்படுத்தப்பட்ட இறக்குமதி விலைமட்ட அதிகரிப்பு வர்த்தக மாற்று

### அட்டவணை II (அ) 1
### நிலையான (1959) காரணிச் செலவு விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான அமைப்பு

| துறைகள் | 1959 | | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | சதவீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், வேட்டையாடுதல், கடற்றொழில் ... | 2,302 | 39.1 | 3,375 | 34.5 | 3,478 | 34.7 |
| 2. சுரங்கத் தொழிலும், பார்க் குழித்தொழிலும் ... | 31 | 0.5 | 67 | 0.7 | 68 | 0.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,379 | 14.1 | 1,401 | 14·0 |
| 4. கட்டடவாக்கம் ... | 283 | 4.8 | 550 | 5.6 | 505 | 5.0 |
| 5. மின்சாரம், வாயு, நீர், சுகாதாரப் பணிகள் ... | 10 | 0.2 | 29 | 0.3 | 24 | 0.2 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல், செய்தித்தொடர்பு ... | 541 | 9.2 | 920 | 9.4 | 988 | 9.9 |
| 7. மொத்த, சில்லறை வணிகம் ... | 801 | 13.6 | 1,316 | 13.5 | 1,327 | 13.2 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் ... | 51 | 0.9 | 129 | 1.3 | 136 | 1.4 |
| 9. குடியிருப்புகளின் உடைமை ... | 201 | 3.4 | 307 | 3.1 | 313 | 3.1 |
| 10. பொது நிருவாகமும், பாதுகாப்பும் .. | 301 | 5.1 | 488 | 5.0 | 522 | 5.2 |
| 11. பணிகள் ... | 728 | 18.3 | 1,297 | 13.3 | 1,334 | 13.3 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி... | 5,930 | — | 9,856 | — | 10,095 | — |
| 13. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | -37 | - 0.6 | - 76 | - 0.8 | - 72 | - 0.7 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி .. | 5,893 | 100.0 | 9,779 | 100.0 | 10,023 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வீதத்தை மேலும் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடையச் செய்தது. எவ்வாறுயினும், ஏற்றுமதி விலைகள் ஓரளவு அதிகரித்து வர்த்தக மாற்று வீதத்தின் வீழ்ச்சி வீதத்தைக் குறைத்து, 1971இல் 7.6 சதவீதமாகவிருந்த இவ்வர்த்தக மாற்று வீத வீழ்ச்சியை 1972இல் 4 சதவீதமாகக் குறைத்தன. இதன்விளைவாக இறக்குமதி இயலளவு வீழ்ச்சியடைந்ததுடன், வர்த்தக மாற்று வீதத்தின் இத்தகைய பாதகமான நிலைமைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டபோது, உண்மைத் தேசிய வருமானவதிகரிப்பு வீதம் 2.6 சதவீதமாக அமைந்தது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி, மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறை விலைகளில் 1971இல் காணப்பட்ட அதிகரிப்பான 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1972இல் 7.1 சதவீதமாகக் காணப்பட்டது. தன்யாளுக்கான வருமான ரீதியில் நடைமுறை விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 5 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

**வளங்களும் அவற்றின் பயன்பாடும்**

அட்டவணை 11 (அ) 2 உற்பத்தி, இறக்குமதிகள் என்பவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய மொத்த வளங்களைக் காட்டுவதோடு மறுபக்கத்தில் நுகர்வு, மூலதன ஆக்கம் ஏற்றுமதிகள் என்பனவற்றிற் பயன்படுத்தப்படுவதையும் காட்டுகின்றது. பொருளாதாரத்துக்கு 1972இல் கிடைக்கக்கூடியதாக இருந்த வளங்கள், ரூ. 159,910 இலட்சமாகும். இது முன்னைய ஆண்டினதைவிட 5.8 சதவீதம் அதிகமானதாகும். இறக்குமதிகள் 1972இல் 4.9 சதவீதத்தால் அதிகரித்தவிடத்து, உள்நாட்டு உற்பத்தி, சந்தை விலைகளின்படி 6.0 சதவீதத்தால் அதிகரித்தது.

**அட்டவணை II (அ) 2**

**மொத்த வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்**

| விடயங்கள் | 1970 | 1971 | 1972 | சென்ற ஆண்டை விட சதவீத மாற்றம் 1971 | 1972 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| **அ. வளங்கள்** | | | | | |
| மொத்த உற்பத்தி ... | 12,710 | 12,744 | 13,511 | + 0.3 | + 6.0 |
| பொருட்களினதும் காரணிகளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 2,549 | 2,365 | 2,480 | — 7.2 | + 4.9 |
| **மொத்தம்** ... | 15,259 | 15,109 | 15,991 | — 1.0 | + 5.8 |
| **ஆ. பயன்பாடு** | | | | | |
| நுகர்ச்சி ... | 10,558 | 10,639 | 11,697 | + 0.8 | + 9.9 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 2,463 | 2,249 | 1,994 | — 8.7 | — 11.3 |
| பொருட்களினதும், காரணிகளல்லாத பணிகளினதும் இறக்குமதிகள் ... | 2,237 | 2,220 | 2,300 | — 0.8 | + 3.6 |
| **மொத்தம்** ... | 15,259 | 15,109 | 15,991 | — 1.0 | + 5.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கடந்த ஆண்டுகளைப்போலவே மொத்தக்கேள்வி, நுகர்வு மூலமும் மூலதன ஆக்கத்தின்மூலமும் அளவிடப்பட்டது. இது, 1972இல் அதிகரிப்பைக் காட்டியது. நுகர்வு 9.9 சதவீதத்தால் அதிகரித்தவிடத்து, மூலதன வாக்கம் பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள் உட்பட 11.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைய மொத்தக்கேள்வி 6.2 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்தத் தேசிய உற்பத்தியின் மெதுவான வளர்ச்சிச் சூழ்நிலையில் நுகர்வினது, உயர்ந்த வீத அதிகரிப்பு மொத்தக் கேள்விக்கும் உற்பத்திமூலம் கிடைக்கக்கூடிய மொத்த வளங்களுக்கும் இடையே ஓர்இடைவெளியை ஏற்படுத்துவதில் முடிவடைந்தது.

## 2. உற்பத்திப் போக்குகள்

### வேளாண்மை

தேயிலை.

1972ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தி 4,706 இலட்சம் இருத்தல்களாக அமைந்து 1971ஆம் ஆண்டின் 4,801 இலட்சம் இருத்தல்களோடு ஒப்பிடுகையில் 95 இலட்சம் இருத்தல்கள் அல்லது 2.0 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி உயர்பிரதேசம், நடுத்தரப் பிரதேசம், தாழ்ந்த பிரதேசம் எனும் மூன்றுவகைத் தேயிலைகளிலும் ஏற்பட்டது உயர்பிரதேசத் தேயிலையினைப் பொறுத்தவரையில் ஏற்பட்ட வீழ்ச்சி 70 இலட்சம் இருத்தல்களாக அமைந்து உற்பத்தியில் ஏற்பட்ட பெரும்பகுதி வீழ்ச்சிக்கு வகை கூறியது உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணம் வட கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் ஏற்பட்ட பாதகமான காலநிலையேயாகும்.

1971ஆம் ஆண்டின் இறுதியில் தேயிலைப்பயிர்ச் செய்கைக்குட்பட்டிருந்த நிலப்பரப்பு 597,171 ஏக்கர்களாகவும், இது 1972இல் 597,645 ஏக்கர்களாகவும் விளங்கியது. இதில் 576,553 ஏக்கர்கள் பயன்தரும் நிலங்களாக விளங்கின. 1972இல் முன்னைய ஆண்டில் மீளப்பயிரிடப்பட்ட 6,640 ஏக்கர்கட்கு எதிராக 6,418 ஏக்கர்களே மீளப்பயிரிடப்பட்டன. இதனால் மீளப்பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 53,343 ஏக்கர்களாயிற்று. மீளப்பயிரிடுதற்கான உதவிப் பணத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உதவிப்பணத்தின் மொத்தத் தொகை ரூ. 217 இலட்சமாகும். 1971ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 226 இலட்சமாகும்.

1966இல் ஆரம்பிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கற் திட்டம் 1972ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. இத்திட்டத்தின்கீழ் கடனுக வழங்கப்பட்ட மொத்தத் தொகை, 1971ஆம் ஆண்டின் ரூ. 150 இலட்சத்து 70 ஆயிரத்தோடு ஒப்பிடுகையில் ரூ. 183 இலட்சத்து 80 ஆயிரமாக விளங்கியது.

றப்பர்.

றப்பர் உற்பத்தி 1972இல் 3,095 இலட்சம் இருத்தல்களாக மதிப்பிடப்பட்டது. இது முன்னைய ஆண்டினைவிட 0.7 சதவீதம் குறைவானதாகும்.

உற்பத்தியில் காணப்பட்ட இச்சிறிதளவிலான வீழ்ச்சி பயன்தரும் நிலங்களின் அளவில்ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகும். 1972ஆம் ஆண்டின் ஒரு ஏக்கருக்கான விளைச்சல் 658 இறாத்தல்களாகக் காணப்பட்டது. இது பெரும்பாலும் 1971ஆம் ஆண்டின் சராசரி விளைச்சலின் அளவேயாகும்.

றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பதிவேடுகளின்படி 1972ஆம் ஆண்டு முடிவில், பயிர் செய்வதற்கு உட்பட்டிருந்த 567,060 ஏக்கர்களோடு ஒப்பிடுகையில் 1971ல் 567,994 ஏக்கர் றப்பர் பயிர்ச்செய்கைக்குட்பட்டிருந்தது. 1972இல் 8,722 ஏக்கர்கள் மீளப் பயிரிடப்பட்டு மொத்த மீளப் பயிரிடப்பட்ட ஏக்கர்கள் 303,538 அல்லது மொத்தத்தில் 53.5 சதவீதமாக விளங்கியது. றப்பர் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்பட்டு இருந்த 567,060 ஏக்கர்களில் 470,324 ஏக்கர்கள் மட்டுமே இவ்வாண்டுக்காலப்பகுதியில் பயன் தருவதாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது.

றப்பர் மீளநடுகை உதவிப்பணத்திட்டத்தின்கீழ், 1972இல் வழங்கப்பட்ட தொகை ரூ. 182 இலட்சமாகும். 1971இல் இத்தொகை ரூ. 167 இலட்சமாக விளங்கியது. இதே உதவிப்பணத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்த உரத்தின் அளவு 1972இல் 773 தொன்களாகும். 1971ஆம் ஆண்டில் இந்தத் தொகை 628 தொன்களாக விளங்கியது.

தெங்கு.

உள்நாட்டில் நுகர்வு செய்யப்பட்டதும், ஏற்றுமதி செய்யப்பட்டதுமான தெங்கு உற்பத்தி தேங்காய்களின் அடிப்படையில் 29,630 இலட்சமென 1972ல் மதிப்பிடப்பட்டது. இது முன்னைய ஆண்டின் 26,170 இலட்சத்தோடு ஒப்பிடுகையில் 13.2 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மத்திய வங்கியின் தெங்கு உற்பத்தி மதிப்பீடு, தேங்காய் அடிப்படையில் ஏற்றுமதிகளையும், உள்நாட்டு நுகர்வினையும் கூட்டுதல் மூலம் பெறப்பட்டது. சம்பந்தப்பட்ட தரவுகள் 1969/70 ஆம் ஆண்டில் குடித்தொகைப்புள்ளி விபரத்திணைக்களத்தினரால் நடாத்தப்பெற்ற சமூக பொருளாதார அளவை மூலம் பெறப்பட்டது.

தேங்காய் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தெங்கு ஏற்றுமதிகளின் அளவு 23.4 சதவீதத்தால், 1971 ஆம் ஆண்டின் 10,200 இலட்சம் தேங்காய்களிலிருந்து 1972இல் 12,580 இலட்சம் தேங்காய்களாக அதிகரித்தது

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் மதிப்பீடுகட்கிணங்க 1972இல் வழங்கப்பட்ட உரத்தினளவு 38,000 தொன்களாகும். தெங்கு உதவிப்பணத்திட்டத்தின்கீழ், 1,186,935 நாற்றுக்கள் குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டன.

நெல்.

நெல் உற்பத்தி 1972ஆம் ஆண்டில் 629 இலட்சம் புசல்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இது, முன்னைய ஆண்டினைவிட 40 இலட்சம் புசல்கள் அல்லது 6.0 சதவீத வீழ்ச்சியினைக் காட்டுகிறது. பெரும்போக காலத்தின் வெளியீடு 1970/71இன் 416 இலட்சம் புசல்களிலிருந்து 1971/72இல் 423 இலட்சம் புசல்களாக அமைந்து, சிறிதளவு அதிகரித்துக் காணப்பட்டது. 1972 இன் பெரும்போக காலத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு உயர்ந்த விளைச்சல் காரணமாக ஏற்பட்டதாகும். இவ்வதிகரிப்பு, 1971ஆம் ஆண்டின் மதிப்பீடாகிய 44.9 ஏக்கருக்கு புசல்களுடன் ஒப்புநோக்குகையில் 1972இல் ஏக்கருக்கு 48. 1புசல்களாக மதிப்பிடப்பட்டது. 1972 சிறுபோக கால நெல் உற்பத்தி 206 இலட்சம் புசல்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவே, 1969ஆம் ஆண்டின் பின்னர் பெறப்பட்ட ஆகக் குறைந்த விளைச்சலாகும். இவ்வுற்பத்தி வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணம் 1972 சிறுபோக காலத்தில் ஏற்பட்ட கடும் வரட்சியேயாகும்.

1961/72 பெரும்போகக் காலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு, 1970/71 காலப்பகுதியின் 1,089 ஆயிரம் ஏக்கர்களோடு ஒப்பிடுகையில் 1,035 ஆயிரம் ஏக்கர்களாக விளங்கியது. 1972, சிறுபோகக் காலப் பகுதியில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 543 ஆயிரம் ஏக்கர்களாகும்.

நெற்கொள்வனவுச் சபையினரால் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு 1971இன் 327 இலட்சம் புசல்களோடு ஒப்பிடுகையில் 1972இல் 261 இலட்சம்புசல்களாக விளங்கியது.

**உப உணவுப்பயிர்களும் கால்நடையும்**

1972ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உப உணவுப்பயிர்களின் பெறுமதி 4.4 சதவீதத்தால் அதிகரித்தாலும்நடைமுறைவிலைகளில் 17.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1972இன் உற்பத்தியின் மொத்த உற்பத்திப்பெறுமதி, 1971இன் ரூ. 4,730 இலட்சத்தோடு ஒப்புநோக்குகையில் ரூ. 5,540இலட்சமாகக் காணப்பட்டது. உருளைக்கிழங்கு, மிளகாய், சின்ன வெங்காயம், மிளகு, வத்தாழை, என்பனவற்றின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவுஅதிகரிப்புக்கள் காணப்பட்டன. உப உணவுப் பயிர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்குரிய முக்கிய காரணம் உயர்ந்த உற்பத்தியாளர் விலைகள் தூண்டுகோலாக இருந்தமையேயாகும்.

பால் உற்பத்தி 1971ஆம் ஆண்டில் 2,192 இலட்சம் போத்தல்களிலிருந்து, 1972இல் 3004 இலட்சம் போத்தல்களாக அதிகரித்தது. இது, 37.0 சதவீத அதிகரிப்பாகும். முட்டை உற்பத்தியும் 1972இனை விட 7.3 சதவீதத்தால் அதிகரித்தது.

**மீன்**

உற்பத்தியாளர் விலைகளின்படி மதிப்பிடப்பட்ட மீன் உற்பத்திகள் 16.7 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இதற்குரிய முக்கிய காரணம் மீன்பிடியில் ஈடுபட்ட வள்ளங்களின் எண்ணிக்கை (இயந்திர, இயந்திரங்களற்ற) அதிகரித்தமையேயாகும்.

**தயாரிப்புத் தொழில்**

உண்மை நியதிகளில் தயாரிப்புத்தொழிலின் அதிகரிப்பு முன்னைய ஆண்டின் 3.3 சதவீதத்தோடு ஒப்பிடுகையில் 1.6 சதவீதமாக விளங்கியது. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி 1971ஆம் ஆண்டின் 9.4சதவீத அதிகரிப்புக்கெதிராக 2.0 சதவீதத்தால் அதிகரித்தது. தயாரிப்புத் தொழில் மூலம் நடைமுறைவிலைகளின்படி சேர்க்கப்பட்ட பெறுமதி 1971 ஆம் ஆண்டின் 4.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1972இல் 14.9 சதவீதத்தால் அதிகரித்தது

**கட்டடவாக்கம்**

கட்டடவாக்க நடவடிக்கைகள் உண்மை நியதிகளின்படி 8.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. கட்டடவாக்கத்தில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குரிய முக்கிய காரணம் கட்டடப்பொருட்கள், உள்ளூரிற் தயாரிக்கப்பட்ட சீமெந்து உற்பத்திகள் என்பவை கிடைப்பதில் ஏற்பட்ட தட்டுப்பாடே ஆகும்.

**பணிகள்**

பணித்துறையில் சிறப்பாக வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், நலத்துறை, கல்வி ஆகிய துறைகளில் 1972 இல் பொருளாதார நடவடிக்கைகள் திருப்திகரமாக இருந்தன. இத்துறையில் சேர்க்கப்பட்ட பெறுமதி நடைமுறை விலைகளில் 7.5 சதவீதமாகவும், நிலையான விலைகளில் 3.8 சதவீதமாகவும் விளங்கியது.

**3. காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி**

**நடைமுறை விலைகளில் உற்பத்திப் பெறுமதி.**

நடைமுறைக் காரணிச்செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பான மதிப்பீடுகளை அட்டவணை 11 (அ) 3 காட்டுகின்றது. 1972 இல் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி 7 1 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. அட்டவணை II (அ) 3.

வேளாண்மை, காட்டுத்தொழில், மீன்பிடித்தல் என்பவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதிகள், 1971 இல் பின்னடைந்தமைக்குப் பதிலாக 1972 இல்

## அட்டவணை II (அ) 3

### நடைமுறைக் காரணிச் செலவு விலைகளின்படி, மொத்தத் தேசிய உற்பத்தி

| துறைகள் | 1970 | 1971 | 1972 | முன்னைய ஆண்டினுக்கு மேலான சதவீத மாற்றம் 1971 | 1972 |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் (ப. இ. ரூ.) | | | 1971 | 1972 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் என்பன .. | 3,949 | 3,893 | 4,119 | – 1.4 | + 5.8 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும், மின்சாரம், வாயு என்பன ... | 1,545 | 1,633 | 1,851 | + 5.7 | + 13.3 |
| 3. கட்டடவாக்கம் .. | 771 | 751 | 711 | – 2.6 | – 5.3 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் ... | 5,496 | 5,689 | 6,118 | + 3.5 | + 7.5 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 11,760 | 11,966 | 12,799 | + 1.8 | + 7.0 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | – 142 | – 138 | – 137 | | |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி .. | 11,618 | 11,828 | 12,662 | + 1.8 | + 7.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறை விலைகளின்படி சிறிது முன்னேற்றமடைந்தன. தெங்கு, மீன், பால், முட்டை என்பனவற்றின் உற்பத்திப் பெறுமதிகளில் கவனிக்கத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டிருக்க, நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. தயாரிப்புத்தொழிலின் சேர்க்கப்பட்ட பெறுமதி (சுரங்கத் தொழிலையும் பார்க்குழித் தொழிலையும் மின்சாரத்தையும் வாயுவையும் உள்ளடக்கும்) 1971இலிருந்து 5.7 சதவீத அதிகரிப்புக்குப்பதிலாக, 13.3 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தேயிலை. றப்பர், தெங்குப்பொருள் என்பனவற்றின் பதனிடல் தவிர்ந்த ஏனைய தயாரிப்புத்தொழில்கள், 1971 இல் 12.1 சதவீதத்தால் அதிகரித்திருக்க, 1972 இல் 11.9 சதவீதத்தால் அதிகரித்தன. கடந்த ஆண்டுகளைப் போலவே, மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் அரசாங்கத்துறைக் கைத்தொழில்களின் பங்கு எறக்குறைய 30 சதவீதமாக அமைந்திருந்தது அரசாங்கத்துறைக் கைத்தொழில்களின் தயாரிப்பில் அதிகரிப்புக்கள் காணப்பட்டுள்ளன. பெற்றோலிய தூய்மையாக்கல் உற்பத்திகள், புடவைகள், இரும்பு உருக்கு உற்பத்திகள், உருக்கு என்பனவற்றில் கூடியளவு அதிகரிப்புக்கள் ஏற்பட்டன.

கட்டடவாக்கத்தின் சேர்க்கப்பட்ட பெறுமதி, 1972 இல் 5.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்குரிய முக்கிய காரணம் கட்டடப்பொருட்களின் தட்டுப்பாடேயாகும்.

பணிகள் துறையின் சேர்க்கப்பட்ட பெறுமதி 1972 இல் 7.5 சதவீதத்தால் அதிகரித்தது. 1972இல் உள்நாட்டு உற்பத்திப்பெறுமதியிலும், இறக்குமதிப்பெறுமதியிலுமேற்பட்ட அதிகரிப்பு, பணித்துறையில் விரிவாக்கத்தை விளைவித்தது. வங்கித் தொழிலும், காப்புறுதித் தொழிலும், மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு என்பவைகளால் அளிக்கப்பட்ட பணிகளின் பெறுமதிகளிலும் அதிகரிப்புக் காணப்பட்டது.

நடைமுறை விலைகளின்படியான, மொத்த உள்நாட்டு உற்பத்தி, ரூ. 119,660 இலட்சத்திலிருந்து, 1972 இல் ரூ 127,990 இலட்சமாக உயர்வடைந்துள்ளது. இலங்கையிலிருந்து வெளியேறும் தேறியகாரணி வருமானம் ரூ. 1,370 இலட்சமாகவிருந்தது. இத்தேறிய வெளியேற்றம் 1971இல் ரூ. 1,380 இலட்சமாகவிருந்தமை, ஒப்பிடற்பாலது. காரணி வருமானத்தின் தேறிய வெளியேற்றத்துக்காக மொத்த தேசிய உற்பத்தியைச் சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1972 இல் 7.1 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

4. **காரணிச்செலவு விலைகளின் (1959) படி, மொத்தத் தேசிய உற்பத்தி**

உண்மை உற்பத்தி

1959 ஆம் ஆண்டின் காரணிச்செலவு விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி, 1971 இற்கு மேலாக, 2.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அட்டவணை II (அ) 4இல் மதிப்பீடுகள் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை II (அ) 4**

**காரணிச் செலவு விலைகளிலான (1959) மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறைகள் | 1970 | 1971 | 1972 | முன்னைய ஆண்டினுக்கு மேலாக, சதவீத மாற்றம் 1971 | 1972 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | | |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் என்பன ... | 3,395 | 3,375 | 3,478 | — 0.6 | + 3.1 |
| 2. தயாரிப்புத் தொழில், சுரங்கமறுத்தல், பாற்குழித்தொழில், மின்சாரம், வாயு என்பன .. | 1,421 | 1,474 | 1,492 | + 3.7 | + 1.2 |
| 3. கட்டடவாக்கம் .. | 598 | 550 | 505 | — 8.1 | — 8.1 |
| 4. வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் என்பன... | 4,366 | 4,456 | 4,624 | + 2.1 | + 3.8 |
| 5. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 9,781 | 9,856 | 10,095 | + 0.8 | + 2.4 |
| 6. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் ... | - 85 | - 76 | - 72 | — | — |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 9,695 | 9,779 | 10,023 | + 0.9 | + 2.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்தத் தேசிய உற்பத்திகளில் 35 சதவீதப்பங்கை வகித்த வேளாண்மைத் தொழிலின் சேர்க்கப்பட்ட பெறுமதி 3.1 சதவீதத்தால் அதிகரித்தது. ஏற்றுமதி வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், தெங்கு வளர்ப்

பின் சேர்க்கப்பட்ட பெறுமதியில், 13.2 சதவீதங்கொண்ட அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. தேயிலே, றப்பர் என்பவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதிகள் முறையே 2.0 சதவீதத்தாலும், 0.8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உப உணவுப்பயிர்களின் சேர்க்கப்பட்ட பெறுமதி 4.4 சதவீதத்தினுல் அதிகரித்தது இவ்வதிகரிப்பு, 1971இன் 25.7 சதவீதங்கொண்ட அதிகரிப்போடு ஒப்பிடுமிடத்து, சிறிதளவானதாகும். தெங்கு உற்பத்தியிலேற்பட்ட 13.2 சதவீதங் கொண்ட அதிகரிப்பும், கால்நடை, மீன், ஏனைய உப உணவுப் பயிர்கள் என்பனவற்றின் உற்பத்தியிலேற்பட்ட 26.5 சதவீதங்கொண்ட அதிகரிப்பும், தேயிலே, றப்பர், நெல் ஆகிய மூன்று வேளாண்மைப் பயிர்களின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்ய உதவியுள்ளன.

சுரங்கத்தொழிலும், பார்குழித்தொழிலும், மின்சாரம், வாயு ஆகியவற்றை உள்ளடக்கிய தயாரிப்புத் துறையின் உண்மைப்பெறுமதி, 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. தயாரிப்புத் துறையினுள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் உண்மை வெளியீடு பெற்ரேலியத் தூய்மையாக்கல் உற்பத்திகள், புடவை, இரும்பு உருக்கு உற்பத்திகள் என்பனவற்றில் ஏற்பட்ட உயர்வு காரணமாக அதிகரித்தது.

கட்டடவாக்கத்துறையின் சேர்க்கப்பட்ட பெறுமதி 1972 இல் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1971 உடன் ஒப்பிடும்போது, 1972 இல் 8.1 சதவீதங் கொண்ட வீழ்ச்சி காணப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில், பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களான கட்டடவாக்கப் பொருட்களில் பற்றுக்குறை நிலேயை இத்துறை அடைந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப்பொருட்களின் மொத்தப்பெறுமதி 1971 இல் ரூ. 701 இலட்சமாக இருந்தமைக்குப் பதிலாக 1972 இல் ரூ. 598 இலட்சமாகவிருந்தது,

பணித்துறைகளின் வெளியீடும் 1972இல் அதிகரித்துள்ளது. வங்கித்தொழிலினதும் காப்புறுதித் தொழிலினதும் பெறுமதி, மூன்றுமாத கால வர்த்தக வங்கி வேலேநிறுத்தம் நிலவியபோதும் 5.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. 1972 இல் 3 கச்சேரி வங்கிகளே உள்ளடக்கிய 18புதிய கிளே அலுவலகங்களும், 131 கிராமிய வங்கிகளும் திறக்கப்பட்டன. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்பு என்பனவற்றின் உண்மை வெளியீடு 1972 இல் 7.3 சதவீதத்தினுல் மட்டுமே அதிகரித்தது. இது, இலங்கைப் போக்குவரத்துச்சபை, இலங்கை அரசாங்கப் புகையிரதச்சேவை, இலங்கை விமானச்சேவை என்பவற்றினுல் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துப் பணிகளிலேற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மொத்தப்பயணர் மைல்கள் 74,190 இலட்சத்திலிருந்து 1972 இல் 86,980 இலட்சத்துக்கு அதிகரித்தன. இலங்கை விமானச் சேவையின்

மொத்தப்பயணர் மைல்கள் 172 இலட்சத்திலிருந்து 298 இலட்சத்துக்கு அதிகரித்தன. இலங்கை அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட நலத்துறை, கல்வித்துறைப் பணிகளும் அதிகரித்தன.

5. உண்மை வருமானம்

1959இன் நிலையான விலைகளின்படிமொத்தத் தேசிய உற்பத்தி மதிப்பீடுகளை உண்மை நியதிகளில் அட்டவணை 11 (அ) 4 காட்டுகின்றது தேசிய வருமான மட்டம் தொடர்பாக ஏற்றுமதி, இறக்குமதிகளின் பெறுமதி முக்கியத்துவத்தைப் பொறுத்தவரையில், 1972இல் உண்மை வெளியீட்டு விரிவாக்கமானது, ஏற்றுமதி, இறக்குமதி விலை இயக்கங்களுக்கெதிராகச் சீராக்கி மதிப்பிடப்பட வேண்டும். ஆகவே நிலையான விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி, வர்த்தக மாற்றுவீத விளைவுகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டு பின்னிணைப்பு11 அட்டவணை 6இல் காட்டப்பட்டுள்ளது இலங்கையின் வர்த்தக மாற்றுவீதம்,இறக்குமதி விலை உயர்வின் காரணமாக 1972இல் மேலும் வீழ்ச்சியடைந்தது. எல்லா இறக்குமதிகளினதும் விலைக்குறிகாட்டி 1971இலிருந்த 150 1 இலிருந்து 1972 இல் 157.6உக்கு அதிகரிக்க, எல்லா ஏற்றுமதிகளினதும் விலைக்குறிகாட்டி 1971இலிருந்த 117.1 இலிருந்து, 1972இல் 118.4 உக்கு அதிகரித்தது. இலங்கையின் வர்த்தக மாற்று வீதம் 1972இல் 4.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வர்த்தக மாற்று வீதத்தின் பாதகமான இயக்கத்தின் விளைவாக ஏற்பட்ட வருமான இழப்பு, 1959ஐ அடியாண்டாகக் கொண்டு அளவிடப்பட்டபடி, 1972 இல் ரூ. 9,701 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வருமான இழப்பு 1971இல் ரூ. 9,552 இலட்சமாக இருந்தமை ஒப்பிடத்தக்கது. உண்மை உற்பத்தி மதிப்பீடுகளைப் பாதகமான வர்த்தக மாற்று வீதத்தின் காரணமாக ஏற்பட்ட வருமான இழப்புக்குச் சீராக்கஞ் செய்வதன் மூலம் பெறப்படும் உண்மைத் தேசிய வருமானம், 1970இன் ரூ. 88,240 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து, 1972இல் ரூ. 90,527 இலட்சமாக விளங்கியது உண்மை உற்பத்தியிலேற்பட்ட 2.5 சதவீத உயர்வுக்குப் பதிலாக, இது 2.6 சதவீத அதிகரிப்பாக மட்டுமே இருக்கிறது. உண்மை வருமான அதிகரிப்பு வீதம் 2.6 சதவீதமாக இருந்ததால், தனியாளுக்கான உண்மைவருமானம், 1972இல் 0.5 சதவீதத்தினுல் அதிகரித்தது.

6. மொத்தத் தேசியச் செலவினம்

நடைமுறைச்சந்தை விலைகளிலான மொத்தத்தேசியச் செலவினத்தின் மதிப்பீடுகள் பின்னிணைப்பு 11 இலுள்ள அட்டவணை 8இல் விவரமாகக் காட்டப்பட்டுள்ளன. கீழேயுள்ள அட்டவணை 11 (அ) 5 மொத்தத்தேசியச் செலவினத்தின் முக்கிய கூறுகளைச் சுருக்கமாகத் தருகின்றது

## அட்டவணை II (அ) 5

### நடைமுறைச் சந்தை விலைகளின்படியான மொத்தத் தேசிய செலவினம்

| விடயங்கள் | 1970 | 1971 | 1972 | முன்னைய ஆண்டுக்கு மேலான சதவீத மாற்றம் 1971 | 1972 |
|---|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | | | 1971 | 1972 |
| 1. தனியார் நுகர்வு .. | 8,910 | 8,849 | 9,773 | — 0.7 | + 10.4 |
| 2. அரசாங்க நுகர்வு ... | 1,649 | 1,790 | 1,924 | + 8.6 | + 7.5 |
| 3. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 2,463 | 2,249 | 1,994 | — 8.7 | — 11.3 |
| 4. மொத்த உள்நாட்டுச் செலவினம் ... | 12,022 | 12,888 | 13,691 | — 1.0 | + 6.2 |
| 5. வெளிநாட்டில் தேறிய முதலீட்டம் .. | - 393 | - 209 | — 269 | | |
| 6. கழிவு: பன்னாட்டுக் கொடைகளினதும் மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் ... | - 60 | - 74 | — 48 | | |
| 7. மொத்தத் தேசிய செலவினம் ... | 12,568 | 12,606 | 13,374 | + 0.3 | + 6.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1972க்கான மொத்தத்தேசியச் செலவினம், 1981இன் மதிப்பீடான ரூ 126,056 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து, ரூ. 133,740 இலட்சமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 6.1 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. மொத்தத் தேசியச் செலவினத்திலேற்பட்ட இவ்வதிகரிப்பானது, முன்னைய ஆண்டின் தொடர்பான எண்தொகைகளுடன் ஒப்பிடுமிடத்து, நுகர்விலேற்பட்ட 9.9 சதவீதங்கொண்ட அதிகரிப்பினாலும் மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட 11.7 சதவீதங்கொண்ட வீழ்ச்சியினாலும் ஏற்படுத்தப்பட்டதாகும்.

### நுகர்வோர் கேள்வி

மொத்தத் தனியார் நுகர்வுச் செலவினம், 1972இல் ரூ. 9,234 இலட்சத்தினால் அல்லது 10.4 சதவீதத்தினால் அதிகரித்தது. பின்னிணைப்பிலுள்ள அட்டவணை 10 இல் விவரமாகக் காட்டப்பட்டவாறு, இறக்குமதிப் பொருட்கள், பணிகள் என்பனவற்றின் மீதான செலவினம் 16.4 சதவீதத்தினாலும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பணிகள் என்பனவற்றின் மீதான செலவினம் 9.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. நடைமுறைச் சந்தை விலைகளிலான தனியார் நுகர்வுச் செலவினம் அட்டவணை 11 (அ) 6இல் காட்டப்படுகிறது.

## அட்டவணை II (அ) 6

### நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனியார் நுகர்வுச் செலவினம்*

| விடயங்கள் | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் | தொகை ப. இ. ரூ. | 16ம் வரிசையின் சதவீதம் |
| 1. உணவு ... | 4,344 | 49.1 | 5,116 | 52.3 |
| 2. குடிபானங்கள் ... | 292 | 3.3 | 329 | 3.4 |
| 3. புகையிலை ... | 550 | 6.2 | 576 | 5.9 |
| 4. ஆடைகளும் ஏனைய சொந்தப் பொருட்களும் ... | 947 | 10.7 | 958 | 9.8 |
| 5. வாடகை, வரி, நீர்க் கட்டணங்கள் .. | 406 | 4.6 | 412 | 4.2 |
| 6. எரிபொருளும் வெளிச்சமும் ... | 259 | 2.9 | 303 | 3.1 |
| 7. தளபாடம், வீட்டுப் பொருட்கள் . | 224 | 2.5 | 257 | 2.6 |
| 8. வீட்டுப் பாவனை நடவடிக்கைகள் .. | 623 | 7.0 | 674 | 6.9 |
| 9. சொந்தக் கவனிப்புகளும் நலத்துறைச் செலவுகளும் | 212 | 2.4 | 253 | 2.6 |
| 10. போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் ... | 808 | 9.1 | 968 | 9.9 |
| 11. பொழுதுபோக்கும் களியாட்டமும் ... | 458 | 5.2 | 476 | 4.9 |
| 12. பல்வகைப் பணிகள் ... | 303 | 3.4 | 342 | 3.5 |
| 13. வெளிநாட்டில் வதிவோர்களின் செலவினம் .. | 23 | 0.3 | 20 | 0.2 |
| 14. கழிவு: நாட்டிலுள்ள வதிவற்றோர்களின் செலவினம் | -350 | -4.0 | -486 | - 5.0 |
| 15. கழிவு: அரசாங்க உள்ளூர்க் கொள்வனவு .. | -250 | -2.8 | -425 | - 4.3 |
| 16. குடும்பங்களினதும், இலாபமற்ற தனியார் நிலையங்களினதும் நுகர்வுச் செல வினம் ... | 8,849 | 100.0 | 9,773 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி,

1. *''தேசியக் கணக்குகளினதும் அதற்குத் துணையான அட்டவணைகளினதும் ஒழுங்குமுறை'' ஐ. நா. நியூயோர்க்கு, 1964, என்பதனை இப்பாகுபாடு அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணையின்படி காட்டப்பட்டுள்ள நுகர்வு அமைப்பின்படி 1972 ஆம் ஆண்டின் தனியார் நுகர்வில் 61.6 சதவீதத்தினை உணவு, குடிவகை, புகையிலை என்பவற்றின் மீதான செலவினங்கள் உள்ளடக்கின. 1971 ஆம் ஆண்டில் இது 58.6 சதவீதமாகும். அவரது, 9.8 சதவீத உடை, 9.9 சதவீதம் போக்குவரத்தும் செய்தித்தொடர்புகளும் 6.9 சதவீதம், வீட்டுப்பாவனை நடவடிக்கைகள், 4.9 சதவீதம் களியாட்டமும் பொழுதுபோக்கும் என்பனவாக விளக்குகின்றன.

தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 9,234 இலட்சத்தில் 16.1 சதவீதம் உணவு, குடிவகை, புகையிலை என்பன மீதான செலவினத்தையும், 1.2 சதவீதம் உடைகள்மீதும், 19.8 சதவீதம் போக்குவரத்து செய்தித் தொடர்புகள், 3.9 சதவீதம் பொழுதுபோக்கு, களியாட்டம் என்பன மீதான செலவினத்தையும் உள்ளடக்கியிருந்தது.

### 7. மொத்த நிலையான மூலதனவாக்கம்.

மொத்த நிலையான மூலதனவாக்க மதிப்பீடுகள் பின்னிணைப்பு 11, அட்டவணை 7இல் தரப்பட்டுள்ளன. 1972இல், இருப்புக்களின் மாற்றங்களையும் உள்ளடக்கிய மொத்த மூலதனவாக்கம் ரூ. 2,548 இலட்சம் அல்லது 11.3

சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மொத்த மூலதனவாக்கத்தின் பட்டியல் தொகை முன்னைய ஆண்டினைவிட ரூ. 3,207 இலட்சத்தால் குறைவடைந்து காணப்பட்டது. மறுபுறத்தில் மொத்த நிலையான மூலதனவாக்கம் ரூ. 660 இலட்சம் அல்லது 3.1 சதவீதத்தால் அதிகரித்தது.

**அரசாங்கத்துறை.**

அட்டவணை 11 (அ) 7 கைத்தொழிற் வகைகளின்படி பாகுபடுத்தப்பட்ட அரசாங்கத்தின் நிலையான மூலதனவாக்கத்தினைக் காட்டுகிறது.

**அட்டவணை II (அ) 7**

**அரசாங்கத்தினது நிலையான மூலதன ஆக்கத்தின் கைத்தொழிற் பாகுபாடு**

| துறைகள் | 1971 | | 1972 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 169 | 34.3 | 196 | 37.9 |
| 2. தயாரிப்புத் தொழில் ... | 14 | 2.8 | 15 | 2.9 |
| 3. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள் ... | 10 | 2.0 | 14 | 2.7 |
| 4. போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு | 90 | 18.3 | 121 | 23.4 |
| 5. குடியிருப்புகளின் உடைமை ... | 1 | 0.2 | 16 | 3.1 |
| 6. பொது நிருவாகம் ... | 119 | 24.1 | 80 | 15.5 |
| 7. பணிகள் .. | 91 | 18.5 | 75 | 14.5 |
| மொத்தம் | 493 | 100.0 | 517 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இலங்கை அரசாங்கத்தின் 1971/72 ஆம் ஆண்டுக்கான செலவின் மதிப்பீடுகளின்படி தயார் செய்யப்பட்டவை (12 மாத விகிதசம அடிப்படையில்)

1972 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் செலவின மதிப்பீடுகட்கிணங்க மொத்த மூலதனச் செலவினம் ரூ. 5,170 இலட்சமாகும். இது 4.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். இந்த ரூ. 5,170 இலட்ச மொத்தத் தொகையில் 37.9 சதவீதம் வேளாண்மைத் துறையிலும், காட்டுத் தொழில், மீன் பிடித்தலிலும் 23.4 சதவீதம் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித்தொடர்பு என்பவற்றிலும் 15.5 சதவீதம் பொது நிர்வாகத்திலும் முதலீடு செய்யப்பட்டன.

**தனியார் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்.**

தனியார்துறைக்கான நிலையான மூலதனவாக்கத்தரவுகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் மூலதனச் செலவினத்தையும் உள்ளடக்குகின்றன. அட்டவணை 11 (அ) 8 இல் தனியாா துறையின் நிலையான மூலதனவாக்கத்தின் பரம்பல் சொத்துக்களின்படி காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II (அ) 8**

**கைத்தொழில் வகைப்படி அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் நிலையான மூலதன ஆக்கம்**

| துறைகள் | 1970 | | 1971 | | 1972 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| 1. வேளாண்மை ... | 89 | 20.2 | 124 | 33.8 | 98 | 30.7 |
| 2. தயாரிப்புத் தொழில் . | 267 | 61.1 | 172 | 46.9 | 90 | 28.2 |
| 3. போக்குவரத்து ... | 56 | 12.7 | 58 | 15.7 | 106 | 33.2 |
| 4. வர்த்தகம் ... | 18 | 4.0 | 3 | 0.8 | 11 | 3.4 |
| 5. பணிகள் | 9 | 1.9 | 10 | 2.7 | 15 | 4.7 |
| மொத்தம் | **438** | **100.0** | **367** | **100.0** | **319** | **100.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1972இல் தனியார் துறையின் மொத்த முதலீட்டம் முன்னைய ஆண்டின் 12.0 சதவீத வீழ்ச்சியோடு ஒப்பிடுகையில் 2.6 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. கட்டடமும் ஏனைய கட்டடவாக்கமும் 1972இல் ரூ. 9,268 இலட்சமாக விளங்கியது. இது, 1971ஆம் ஆண்டின் வீழ்ச்சியாகிய 5.9 சதவீதத்தோடு ஒப்பிடுகையில் 6.7 சதவீதங்கொண்ட வீழ்ச்சியாகும். பொறித் தொகுதியினதும், இயந்திரங்களினதும் முதலீடு ரூ. 2,369 இலட்சமாகக் காணப்பட்டது.

## அட்டவணை II (அ) 9

### இருப்புச் சொத்துக்களின் வகைப்படி தனியார் துறையினதும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் நிலையான மூலதனவாக்கம்

| இருப்புச்சொத்தின் வகை | 1970 | | | | 1971 | | | | 1972 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | | தனியார் துறை | | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | | தனியார் துறை | | அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | | தனியார் துறை | |
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் |
| பெருந்தோட்டச் செய்கையும், காணி அபிவிருத்தியும் | 32 | 7.3 | 82 | 5.7 | 26 | 7.1 | 85 | 6.6 | 27 | 8.5 | 86 | 6.3 |
| கட்டடமும் ஏனைய கட்டட வாக்கமும் ... | 154 | 35.2 | 901 | 62.8 | 141 | 38.3 | 853 | 66.6 | 94 | 29.5 | 833 | 60.8 |
| பொறித் தொகுதியும் எந்திரங்களும் ... | 176 | 40.3 | 146 | 10.2 | 128 | 35.0 | 159 | 12.4 | 76 | 23.8 | 161 | 11.8 |
| போக்குவரத்துக் கருவிகள் ... | 57 | 13.1 | 187 | 13.1 | 50 | 13.7 | 121 | 9.4 | 85 | 26.6 | 194 | 14.2 |
| ஏனைய மூலதனப் பொருட்கள் ... | 18 | 4.1 | 118 | 8.2 | 22 | 5.9 | 63 | 4.9 | 38 | 11.9 | 98 | 7.2 |
| **மொத்தம்** ... | **438** | **100.0** | **1434** | **100.0** | **367** | **100.0** | **1280** | **100.0** | **319** | **100.0** | **1370** | **100.0** |

**குறிப்பு:** மேலேயுள்ள அட்டவணை, 1972ஆம் ஆண்டுக்கான பின்வரும் கூட்டுத்தாபனங்களின் தரவுகளை உள்ளடக்காது. ஏனெனில் அவை எங்களால் அனுப்பப்பட்ட வினாக் கொத்துக்களுக்குப் பதில் அளிக்கவில்லை.

1. கிழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம்.
2. இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம்.
3. தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம்.
4. இலங்கைத் தோல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்.
5. தேசிய பாற்சபை (பதனிடல்).
6. அரச அச்சுக் கூட்டுத்தாபனம்.
7. தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்.
8. இலங்கைப் போக்குவரத்துச் சபை.
9. அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம்.
10. கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனம்.
11. தேசிய சேமிப்பு வங்கி.
12. இலங்கை உணவகக் (கோட்டல்) கூட்டுத்தாபனம்.
13. அணு ஆற்றல் அதிகாரச் சபை.
14. மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம்.
15. மக்கள் வங்கி.
16. கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
17. தேசிய லொத்தர்ச் சபை.